# வெற்றிடங்கள்

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## காலநிலை மீள்தன்மை மற்றும் நவீனமயமாக்கப்பட்ட நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தினூடாக உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன்னோடி செய்முறை மாதிரிகளை அமுல்படுத்தும் திட்டம்

# திட்ட ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்

காலநிலை மீள்தன்மை மற்றும் நவீனமயமாக்கப்பட்ட நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தினூடாக உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன்னோடி செய்முறை மாதிரிகளை அமுல்படுத்தும் திட்டத்திற்காக, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (MSD) 2026/02ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு அமைவாக பின்வரும் பதவிகளுக்கு முழுநேர "ஒப்பந்த அடிப்படையிலான" திட்ட ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காகத் தகுதியும் அர்ப்பணிப்புமுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவிகளுக்கான சம்பளம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (MSD) 2026-03-28ஆம் திகதிய 2026/02ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02ஆம் பின்னிணைப்பின் 01ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அடிப்படைத் தகுதி மற்றும் அனுபவத் தேவைகள் 1ஆம் பின்னிணைப்பின் 01ஆம் நிரலில் விவரிக்கப்பட்டுள்ளன.

| இல. | பதவி | வகைப்பாடு | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | திட்ட முகாமைத்துவப் பிரிவு | | |
| 1. | இளநிலை சிவில் பொறியியலாளர் (II) | D | 1 |
| 2. | முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் | உதவி ஊழியர் | 1 |

**பொதுவான நிபந்தனைகள்**

விண்ணப்பதாரர்கள் 64 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஆங்கில மொழியில் புலமை, அரசாங்க விதிமுறைகள் பற்றிய பரிச்சயம் மற்றும் கணினி அறிவு ஆகியன அத்தியாவசியத் தேவைகளாகும். இலங்கையில் வெளிநாட்டு நிதியுதவி பெற்ற திட்டங்களில் பணிபுரிந்த அனுபவம் கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.

தற்போது அரசாங்க / அரசு சார்ந்த துறையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு www.irrigationmin.gov.lk என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

(மேற்கூறப்பட்ட 2026/02ஆம் இலக்க சுற்றறிக்கையைப் பார்வையிட நிதி அமைச்சின் இணையதளத்தைப் பார்க்கவும்)

முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் பதவிக்கான சம்பளம், 2026-03-28ஆம் திகதிய 2026/02 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2025-03-25ஆம் திகதிய 2025/10ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை ஆகியவற்றின்படி அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டம் மற்றும் கொடுப்பனவுகளுக்கு அமைவாக இருக்கும்.

விண்ணப்பங்கள் 2026 ஒக்டோபர் 27ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத்தபால் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கும் வகையில் அனுப்பப்பட வேண்டும். அத்துடன் கடித உறையின் மேல் இடதுபுற மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும்.

திட்டப் பணிப்பாளர்,<br>
காலநிலை மீள்தன்மை மற்றும் நவீனமயமாக்கப்பட்ட நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தினூடாக உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன்னோடி செய்முறை மாதிரிகளை அமுல்படுத்தும் திட்டம்,<br>
திட்டப் பணிப்பாளர் அலுவலகம்,<br>
இல. 26, நிலப் பயன்பாட்டுக் கட்டிடம்,<br>
ஜாவத்தை வீதி, கொழும்பு 05.

தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர். எந்தவொரு வடிவத்திலுமான செல்வாக்குச் செலுத்துதல்கள் தகுதியின்மையாகக் கருதப்பட்டு, அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்**<br>
**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு.**